செய்தி வெளியீட்டு எண்.509 நாள்: 20.8.2009

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் பார்வையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பணி நியமனம் வழங்க சிறப்பு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டது

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பார்வையற்றோர் பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில், அதன் நிர்வாகிகள் கடந்த மாதம் சந்தித்து தங்களை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கோரிக்கைவிடுத்தனர். அப்போது அவர்களிடம் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் உங்களது கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

அதன்படி, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையற்ற பட்டதாரிகளின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, அதுகுறித்து முடிவெடுக்க மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திரு.எம். குற்றாலிங்கம், சமூகநலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. ராமமோகன ராவ் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டத்தினை நடத்தினார். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுடைய 100 பார்வையற்ற பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசாணை வெளியிட ஆவன செய்தார்.

அதன் அடிப்படையில் வெளியிடப்பட்ட, அரசாணை நிலை எண்.100ன்படி, பார்வையற்ற பட்டதாரி ஆசிரியர்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ், வரலாறு மற்றும் ஆங்கிலம் பாடப்பிரிவுகளில் வேலைக்காக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் தகுதியுடைய பார்வையற்ற ஆசிரியர்களை கொண்டு 100 பணியிடங்களை, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்ப சிறப்பு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ், வரலாறு மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடப்பிரிவுகளில் முறையே 40, 40, 20 ஆக 100 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

மேற்கண்ட அரசாணை வெளியிடப்பட்டதையொட்டி, தமிழ்நாடு பார்வையற்றோர் பட்டதாரிகள் சங்கத்தினர், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (20.8.2009) தலைமைச் செயலகத்தில் சந்தித்து ஒட்டுமொத்த பார்வையற்ற சமுதாயத்தின் சார்பில் உளம்கனிந்த நன்றியினை உரித்தாக்குவதாக தெரிவித்தனர். அச்சமயம், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், பார்வையற்ற பட்டதாரிகளிடம் உங்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக எப்பொழுது வேண்டுமானாலும் என்னை நேரிடையாக தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் அவர்கள் உடனிருந்தார்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.